Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 14
இதழ் 112

யாழ்ப்பாணம் வைகாசி 19 ரபி; ஆகிர் 18 வியாழக்கிழமை (1-6-72)

WOLSELEY
வூல்சிலி 2"
நீர் இறைக்கும் யந்திரங்கள்
உபகரணங்களுடன்
மலிவான விலையில் கிடைக்குமிடம்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7130 தந்தி: KATHIR

## கல்வி அமைச்சர் யாழ் விஜயத்தின் போது நடந்த

# மகாஜன பகிஷ்காரம் பற்றி கல்வி இலாகா ஆராய்கிறது

## அறிக்கை தரும்படி அதிபருக்கு உத்தரவு

மாவிட்டபுரம், புதன்

கல்வி அமைச்சர் அல்ஹாஜ் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கு விஜயஞ் செய்திருந்தபோது மாணவர்கள் பகிஷ்காரம் செய்தது குறித்து கல்வி அமைச்சு விபரம் கோரியுள்ளது.

அன்றைய தினம் மாணவர்கள் பகிஷ்காரம் செய்தது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி அக்கல்லூரியின் அதிபரை கல்வி இலாகாவினர் கோரியுள்ளனர்.

அன்றைய கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் வட பகுதிக்கு விஜயம் செய்தபொழுது தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் விஜயம் செய்யவிருந்தார். இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. ஆனால் மாணவர்களில் பெரும்பான்மையானோர் அன்றையதினம் கல்லூரிக்கு வராமல் பகிஷ்கரித்தார்கள். இதனால் அமைச்சரின் விஜயம் ரத்துச்செய்யப்பட்டதாக தெரிகிறது.

## 3 நாள் நிலைமை பற்றி ஆராய்வு

இணுவில்: யாழ். மாவட்டத்தில் மே. 22, 23, 24ம் திகதிகளில் மூன்று தினங்களும் பாடசாலைகளின் நிலை எப்படி இருந்தது என்பது பற்றிய ஆராய்வு ஒன்றையும் வடமாகாண கல்விப் பகுதியினர் மேற்கொண்டுள்ளனர்.

மேற்படி தினங்களில் பாடசாலைக்குச் செல்லாத ஆசிரியர் மாணவர்களைப் பற்றிய விபரங்களைத் திரட்டும் வேலையில் வடமாகாண கல்வி இலாகா அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

பிரஸ்தாப மூன்று நாட்களிலும் பாடசாலைகள் நடைபெற்றனவா அல்லது நடைபெறவில்லையா, நடைபெறவில்லையானால் காரணம் என்ன? மூன்று தினங்களிலும் பாடசாலைக்குச் செல்லாத ஆசிரியர், மாணவர் விபரம் ஆகியவற்றை அறிவிக்கும்படி பாடசாலை அதிபர்களுக்கு கல்விப் பகுதியால் அனுப்பப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் கோரப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர் பகிஷ்கரிப்புக்கு காரணம் என்ன என ஆராய்ந்து தமக்கு அறிக்கை சமர்ப்பிக்கும்படி கல்வி இலாகா அதிகாரிகள் இப்பொழுது கல்லூரி அதிபரைக் கோரியுள்ளனர்.

தமிழூர்

## கூட்டணியினர் மக்கள் கருத்தை அறிவார்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவினர் நாளை கிழக்கு மாகாணத்திற்குச் செல்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் கூட்டங்கள் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இம் மாதம் 3ந் திகதி கிழக்கு மாகாணத்தில் முதலாவது பிரசாரக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. நடவடிக்கைக் குழுவினர் கிழக்கு மாகாணத்தில் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களையும் நேரில் சந்தித்து அவர்களின் கருத்தை அறிந்து கொள்வார்கள்.

தேசிய அரச பேரவையின் உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச்செய்வதா இல்லையா? விசுவாசப்பிரமாணம் எடுப்பதா இல்லையா? என்பது பற்றி நடவடிக்கைக் குழுவினர் மக்களின் கருத்தை அறிவார்கள்.

இக்கருத்துக்கள் இம்மாதம் 25ந் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படுமெனத் தெரியவருகிறது.

அளவெட்டி அடைவுகடைகொள்ளை கொலை

## ஜூன் 13-ம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

மாவிட்டபுரம், புதன்

அளவெட்டி அடைவுகடை கொள்ளை கொலைவழக்கு அடுத்தமாதம் 13ம்திகதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

அளவெட்டியைச் சேர்ந்த அடைவுகடை முதலாளியான தம்பிமுத்துவை கொலை செய்தது, அவரது நகைக்கடையில் இருந்த நகைகள் கொள்ளை அடித்தது உட்பட 11 குற்றச் சாட்டுக்களின் மீது கே. குணபாலசிங்கம், பி. கணேசராஜா, பி. கணேசராஜா, எஸ். கணபதி, எஸ். முத்துச்சாமி எஸ். லெனின் அல்லது மாவீரர், எஸ். முத்துலிங்கம் ஆகியோர்மீது இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிபதி திரு ஐ. சிவானந்தன் முன்னிலையில் எடுக்கப்பட்ட சமயம் இவ்காரணங்களால் நீதிபதி வழக்கை ஜூன் மாதம் 13ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

வேலிக்குள்ளால்கைவிட்டு

## பணப்பையைத் திருடினர்களாம்

யாழ்ப்பாணம், வியா. ... கல்லூ... ...திலா ...ாவ ... பற்றி குருநகர் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. குருநகர் பொலிஸ் நிலையப் பொறுப்... ...ராசா...

## இலங்கரத்தினவுக்கு பாராட்டு

கோட்டை, புதன்

உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தினவின் 25 வருட அரசியல் வாழ்வை கௌரவிக்குமுகமாக ஹதரலியத்தவில் பாராட்டுவிழா ஒன்று நடைபெற்றது.

இவ்விழாவிற்குப் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா தலைமை வகித்து ஹதரலியத்த மகாவித்தியாலயத்தில் திரு. இலங்கரத்தினவின் பெயரில் கட்டப்பட்ட "இலங்கரத்ன ஞாபகார்த்த மண்டபத்தை"த் திறந்து வைத்தார்.

"நாட்டு நலனில் அக்கறை கொண்ட ஒரு தலை சிறந்த அரசியல்வாதியாகவே திரு. இலங்கரத்ன என்றும் திகழ்கிறார்" எனப் பிரதமர் வர்த்தக அமைச்சரைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டார்.

80 சதமும் பாண்டியன்தாழ்வில் ...ம்பன் கந்தசாமி வீட்டுப் ...ன்புறம் புதைக்கப் ...ட்டிருந்த தெரியவந்த ...ெடுக்கப்பட்டு. இட ...ண்ணீர் நிறையப் ...டிருந்ததாம். ...பர்கள் இருவ ...ரணம் நீதிப ... ...யப்பட்ட ... ...ப்போடப் ...[இ தி]

## 10,000 காணியற்ற விவசாயிகள் விண்ணப்பம்!

குருநகர், வியா

யாழ் மாவட்டத்திலுள்ள குடியேற்றத் திட்டங்களுக்கான காணிகளுக்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நேற்றுடன் முடிவடைந்தது.

வடபகுதியிலிருந்து சுமார் 10,000 காணியற்ற விவ

(5-ம் பக்கம் பார்க்க)

## வட்டு எம். பி.யை பலாலியில் வரவேற்றனர்

யாழ்ப்பாணம், வியா

வட்டுக்கோட்டை எம். பி. திரு ஆ. தியாகராசா நேற்று காலை விமானத்தில் பலாலி விமானநிலையத்தை வந்து சேர்ந்தபோது அவரது ஆதரவாளர்கள் வரவேற்றனர்.

புதிய அரசியல் சாசனத்தில் கைச்சாத்திட்ட பின்னர் கொழும்பிலிருந்து திரும்பிய திரு தியாகராசாவை அவரது ஆதரவாளர்கள் மாலைசூட்டி வரவேற்று காரொன்றிலுள்ள அவரது இல்லத்துக்கு அழைத்துச் சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-K R விஜயா
நடித்த
நிலவே நீ சாட்சி

யாழ் தியேட்டர்
(காங்கேசன்துறை)
தினசரி 6-30 இரவு 9-30
சனி, ஞாயிறு 2-30
HATARI

பவானி சினிமா
மூளாய்
தினசரி 6-30 இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்-வாணிஸ்ரீ
நடித்த
கன்னிப்பெண்

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 4-15 மணிக்கு
CARRY ON AGAIN DOCTOR
தினசரி 6 30, இரவு 9-45
BICYCLE HORA
(சைக்கிள் திருடன்)

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30 6-30
சிவாஜி கணேசன் - ஜெயலலிதா
சுந்தரராஜன்—பாலாஜி
மற்றும்பலர் நடித்த
பாலாஜியின் ராஜா (வர்ணச் சித்திரம்)

தினசரி காலை 10-30 இரவு 10-00
கவலை இல்லாத மனிதன்

வெலிங்டன் (யாழ்.நகர்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 10-00
சனி, ஞாயிறு காலை 10-30

★ சிவாஜி
★ லக்ஷ்மி
★ முத்துராமன்
★ நிர்மலா
நம்பியார்
நாகேஷ்
ஸ்டூக



மற்றும் பலர் நடித்த
தங்கைக்காக
இசை: விஸ்வநாதன் டைரக்ஷன்: யோகானந்த்

லிடோ (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர்.
★ சாவித்திரி
★ நாகேஷ்
★ எம். ஆர். ராதா
★ நம்பியார்
நடித்த
வேட்டைக்காரன்

யாழ்ப்பாணக் கல்லூரி
பட்டதாரிப் பிரிவு
வட்டுக்கோட்டை
க. பொ. த. (உ. த.)
முதல் வருடம்
கலை/விஞ்ஞான
பிரவேசம்

சேர்க்கறிய வகுப்புகளுக்கு க. பொ. த. [சா. த.] பரீட்சையில் ஒரே முறையில் 2 திறமைச் சித்திகளுடன், ஐந்து பாடங்களில் தேறியவர்கள் விண்ணப்பிக்கலாம். விபரப்பிரதியையும், விண்ணப்பப்பத்திரத்தையும் பெற ஒன்றுக்கான அஞ்சல் கட்டணையையும், 30 சதத்துக்கான முத்திரையையும், அனுப்பிப் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்
வட்டுக்கோட்டை. 4210

நியூ கலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி ஞாயிறு பி ப 2-30
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தான்

சாந்தி சங்கானை
தினசரி 6-30, 9-30
ஞாயிறு 2-30
சுந்தரராஜன்-நாகேஷ்
சௌகார் ஜானகி
நடித்த
கஸ்தூரி திலகம்
விபா. வெள்ளி, சனி
மாலை 4-15
A STUDY IN TERROR

வெஸ்லி சினிமா
(கானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
சிவாஜி-பத்மினி
தூக்குத் தூக்கி

MANOHARA
Jaffna
Daily 4-45 p m only
30 WINCHESTERS FOR EL DIABLO
Daily 6 30 & 10-00 p m
BADUTH EKA HORU
வத் எக ஹொறு
(சிங்களம்)

REGAL (Jaffna)
Daily 5-15 & 7-15 p m.
SOLDIER BLUE
தினசரி 2-00 இரவு 9-45
பத்மினி — பாலையா
மாங்கல்ய பாக்கியம்

## வரி விளம்பரம்

சாப்டிங்ஸ் 1 தொடக்கம் 7 அங்குலம் வரைக்கும் (M. S. Shaftings) வேண்டிய அளவுகளில் மலிவாகக் கிடைக்கும். ராஜா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 5050

**விற்பனைக்கு**

ஆயர்பாடி ரசிப்புலவன் அமோகமான தலைசிறந்த சந்தைகளுடன் தினமும் பெறுகின்றன. 1972 சித்திரை முதல் 12 மாதமளவன் ரூபா 1-50. உங்களின் முயற்சிகளை விளக்கமாக நன்மைகளைச் சாட்டித்தரும். சோதிடபலன்கள். ஆயர்பாடி தெல்லிப்பழை 4987

7 பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: 22 1/3, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 5046

சச்சரோமிடை, பழைய பூங்கா வீதியில் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். E. R. போல்பின்னை, 44/1, பழைய பூங்கா வீதி, சச்சரோமிடை, யாழ்ப்பாணம். 5051

**தேவை**

மில்லில் வேலை செய்ய அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை. நேரில் வருக. ஆயாக்கடவையான் அரைக்கும் ஆலை, மாலி ரோட், புன்னாலைக்கட்டுவன் தெற்கு. 5049

கைத்தறி நெசவு சாலைக்கு அனுபவம் வாய்ந்த ஆண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்: த. இலட்சுமணன், மலுநாடு, காரைநகர். 5048

'ஈழநாடு' பத்திரிகை விநியோகிப்பதற்கு சைக்கிள் ஓட்டத் தெரிந்த ஒரு பையன் தேவை. நேரில் சந்திக்கவும். வை. வடிவேலு, ஈழநாடு ஏஜென்ட், புளியங்கூடல் சந்தி. 5043

**கல்வி**

ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழக புகுமுக வகுப்பு வரை! எல்லாப் பாடங்களிலும்! வேலை நாட்களில் பின்னேரங்களிலும்; விடுதலை நாட்களில் காலை மாலை நேரங்களிலும்; அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கல்வி கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: அதிபர், உமா கல்விநிலையம், 77, அரசடி வீதி, யாழ்ப்பாணம். (தட்டாதெரு சந்திக்கு அண்மையில்) 5047

## டாக்டர் மலலசேகரா காயமுற்றார்

கொழும்பு, புதன்

இலங்கைப் பௌத்த மகா சம்மேளனத்தின் தலைவர் டாக்டர் குணபால மலலசேகரா நேற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்த மோட்டார் வாகனம் ஹவாவத்த என்ற இடத்துக்கருகில் லொறி ஒன்றுடன் மோதிக்கொண்டதால் அவர் காயங்களுக்கு உள்ளானார்.

ஹாவத்த ஆஸ்பத்திரியில் முதற் சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர் டாக்டர் மலலசேகரா கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

## அறிவித்தல்

ஐரோப்பாவில் வசிக்கும் இலங்கையர் ஒருவர் வடமாகாணத்தில் தயாரிக்கப்படும் பொருட்களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதில் உதவி செய்ய விரும்புகிறார். பொருட்களைப் பற்றிய சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம்: K. Sivarajah, Production Division, A/S. Findus, 9600, Hammevfest, Norway. 4209

## இ. தொ. தொ. சங்கம் வரவேற்பு

ஹட்டன், புதன்

"இலங்கை சுதந்திர குடியரசாகப் பிரகடனப்படுத்தப்படுவதையும் மகாராணியுடனான சகல அரசியல் தொடர்புகளையும் இலங்கை துண்டித்துக்கொள்வதையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளின் எம்மீது திணிக்கப்பட்ட அரசியல் சட்டதிட்டத்தை நிராகரிப்பதையும் இலங்கை தோட்டத் தொழிலாளர் [செங்கொடி] சங்கம் வரவேற்கின்றது. எமது தேசிய சுதந்திரத்தை வென்றெடுத்து அதனை விஸ்தரப்படுத்துவதற்கான எமது மக்களின் நீண்ட கடுமையான போராட்டத்தில் இது முன்னேற்றப் படியாகும் என எமது சங்கம் கருதுகின்றது."

இலங்கை தோட்டத் தொழிலாளர் [செங்கொடி] சங்கம் கடந்த 21ந் திகதி ஹட்டனில் கூடிய செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியது.

—— ——

## தேர்தலை நடத்துக

குருநகர், புதன்

சென்ற 24-ம் திகதி நடந்த வேலணை மநோக சங்கத்தின் பொதுத் தேர்தலின்போது தேர்தல் நடவாது ஒத்திவைக்கப்பட்ட மேற்படி சங்கத்தின் 11-ம் இலக்க கிளையின் தேர்தலை உடன் நடத்த ஆவன செய்யும்படியும், இத் தேர்தல் நடவாது விடப்பட்டமை பற்றி விசாரணை நடத்துமாறும் இக் கிளை உறுப்பினர்கள் கூட்டுறவு ஆணையாளருக்குத் தந்தி மூலம் அறிவித்துள்ளனர்.

—·—

## கஷ்டங்களை ஆராயும்

யாழ்ப்பாணம், வியாழன்

வடமாகாணத்தில் முந்திரி பயிர்ச் செய்கையில் உள்ள கஷ்டங்களை ஆராய இம் மாதம் 5ந் திகதி யாழ். அரசாங்க அதிபர் செயலகத்தில் ஒரு கூட்டம் கூட்டப்படவிருக்கிறது.

வடமாகாண மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. ஜோசேப் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் தோட்டவகுதி அமைச்சின் உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகிறது. இதற்கான அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன. [குவிம]

இப்பொழுது திரையிடப்படுகிறது
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ ரவிச்சந்திரன் ★ கே. ஆர். விஜயா
★ நாகேஷ் ★ டி. கே. பகவதி
வி. கே. ராமசாமி — எஸ். வி. சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சபதம்
டைரக்ஷன்: பி. மா...

யாழ். மத்தியகல்...
... 11—...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

